[1989 மே 4

தாம்போகியை மேம்பாலமாக மாற்றுதல்.

192—(* வினா எண். 363)—திரு. கே. சுந்தர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஒன்றியம், திருமுக்கூடல் அருகில் பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள தாம்போகியை மேம்பால மாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப் பட்ட தரைப் பாலம் அது. மழைக் காலங்களில் அந்தப் பாலத் தை மணல் மூடிவிடுவதால் இரண்டு மாதங்களுக்குப் போக்கு வரத்து தடைப்பட்டு விடுகிறது. ஆகவே இதுபற்றி அமைச்சர் அவர்கள் ஆழ்ந்த அக்கறையுடன் மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும் என்று சொன்னால், சுமார் 430 லட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. நிதிநிலை சரியானதற்குப் பிறகு அரசு அந்த வேலைத் திட்டத்தைப் பரிசீலிக்கும்.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கட்டப்பட்டுள்ள அந்தத் தரைப்பாலத்தின் தரைப் பகுதியானது சிங்க்காகி மிகவும் மோசமான நிலைமை யில் இருப்பதால்; இதையாவது உடனடியாக, பழுது பார்த்துத்தருவதற்கு முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாகப் பழுது பார்ப்பதற்கு அரசு நட வடிக்கை எடுக்கும்.